Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், பிப்ரவரி 25, 2025 | இதழ் 318

# விவசாயிகளின் கணக்குகளில் இதுவரை ரூ.3.5 லட்சம் கோடி சேர்ந்திருப்பது எனக்கு அபரிமிதமான திருப்தியான, பெருமையான விஷயமாக உள்ளது: பிரதமர்

சென்னை, 25 பிப்ரவரி 2025: இந்திய விவசாயிகளுக்கு ஆதரவளிக்கவும், அவர்களை உயர்த்தவும் அர்ப்பணிக்கப்பட்ட மிகச் சிறந்த முன்முயற்சியான பிரதமரின் விவசாயிகள் நலனுக்கான நிதித் திட்டத்தின் 6-வது ஆண்டில் நாடு முழுவதும் உள்ள வேளாண் சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். அவர்களின் கணக்குகளில் இதுவரை ரூ.3.5 லட்சம் சேர்ந்திருப்பது குறித்து அவர் திருப்தி தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டிருப்பதாவது;

“பிஎம் கிசான் சம்மான் நிதித் திட்டத்தில் 6-வது ஆண்டு நிறைவில் நாடு முழுவதும் உள்ள நமது வேளாண் சகோதர, சகோதரிகளுக்கு எனது வாழ்த்துகள். அவர்களின் ஞாணக்குகளில் மூன்றரை லட்சம் கோடி ரூபாய் சேர்ந்திருப்பது எனக்கு அபரிமிதமான திருப்தியையும், பெருமையையும் அளிப்பதாக உள்ளது. எங்களின் இந்த முயற்சி விவசாயிகளுக்கு மதிப்பு, வளம், புதிய பலம் ஆகியவற்றை அளிப்பதாக உள்ளது.

# சி.எஸ்.ஐ.ஆர்-ஐ.ஐ.ஐ.எம் ஏற்பாடு செய்த இரண்டு நாள் தேசிய புத்தொழில் விழா நிறைவு

சென்னை, 25 பிப்ரவரி 2025: ஜம்முவில் உள்ள அறிவியல், தொழில்துறை ஆராய்ச்சிக் குழுமம் - இந்திய ஒருங்கிணைந்த மருத்துவ நிறுவனம் ஆகியன இணைந்து நேற்று நடத்திய தேசிய புத்தொழில் விழா வெற்றிகரமாக நிறைவடைந்தது. ஜம்மு-காஷ்மீரில் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பது, புதுமை, தொழில்முனைவோர் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவிலான முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இந்த இரண்டு நாள் திருவிழாவை பிப்ரவரி 22, சனிக்கிழமை அன்று மத்திய அறிவியல், தொழில் நுட்பம், புவி அறிவியலுக்கான இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், தொடங்கி வைத்தார். ஞாந்தி நகரில் உள்ள அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இரண்டு நாள் விழாவில், ஜம்மு பிராந்தியத்தின் பல்வேறு கல்லூரிகள் மற்றும் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர். தொழில்முனைவோர், முதலீட்டாளர்கள், தொழில் துறை தலைவர்கள், இந்த விழாவில், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், உயிரி காப்பகங்கள், உற்பத்தியாளர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூகத்தின் உறுப்பினர்கள் காட்சிப்படுத்தப்பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பார்வையிடுவதற்கான தளத்தை வழங்கினர்.

இதில் 800-க்கும் மேற்பட்டோர் கண்காட்சியைப் பார்வையிட்டனர். புத்தொழில் நிறுவனங்களின் புதுமையான யோசனைகள், அவர்களில் சிலர் உருவாக்கிய தயாரிப்புகள் மற்றும் தொழில் நுட்பங்களின் செயல் விளக்கத்தைக் கேட்டறிந்தனர்.

# வக்கீல்கள் சட்டத் திருத்த மசோதா: சட்டத்துறையின் சுதந்திரம் மீது தொடுக்கப்படும் நேரடி தாக்குதல்; முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்

சென்னை 25, பிப்ரவரி 2025 : வக்கீல்கள் சட்டத் திருத்த மசோதா என்பது சட்டத் துறையின் சுதந்திரம் மீது தொடுக்கப்படும் நேரடி தாக்குதல் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்து உள்ளார். முயூலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் கூறியிருப்பதாவது:- ‘‘சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் விளக்கு’’ என்று அண்ணா சொன்னார். வக்கீல்கள் சட்டத் திருத்த மசோதா 2025 என்பது சட்டத் துறையின் சுதந்திரம் மீது தொடுக்கப்படும் நேரடி தாக்குதல் ஆகும். முதலில், தேசிய நீதிபதிகள் நியமன ஆணையம் வழியாக நீதிபதி நியமனங்களை அபகரிக்க முயன்றது. பின்னர் நீதிபதி நியமனங்கள் மற்றும் பணியிட மாற்றங்களில் கொலீஜியத்தின் பரிந்துரைகளை புறந்தள்ளியது என 2014 முதல், மத்திய பா.ஜனதா அரசானது அமைப்பு ரீதியாக நீதித்துறையின் சுதந்திரத்தை சிதைத்து வருகிறது. தற்போது பார் கவுன்சில்களின் கட்டுப்பாட்டை தன் கையில் எடுத்துக் கொள்ள முயல்வது மூலம் சட்டத் தொழிலின் தன்னாட்சியை பறித்து, நீதித்துறையின் சுதந்திரத்தையே பலவீனப்படுத்தப் பார்க்கிறது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலின் பெயரை, ‘மெட்ராஸ் பார் கவுன்சில்’ என மாற்ற நினைப்பதன் மூலம் பா.ஜ.க.வுக்கு தமிழ் மேல் உள்ள வெறுப்பு இந்த சட்ட வரைவிலும் தெளிவாக வெளிப்பட்டு உள்ளது. தமிழ்நாடு வெறும் பெயரல்ல, அது எம் அடையாளம்! தன்னியல்பாக வெடித்த போராட்டங்களாலும், கடும் எதிர்ப்புகளாலும் தற்போது இந்த சட்ட முன்வடிவைத் திரும்பப் பெறும் நிலைக்கு மத்திய அரசு தள்ளப்பட்டு உள்ளது. எனினும், இது மீண்டும் பரிசீலிக்கப்பட்டு, புதிய வடிவில் கொண்டு வரப்படும் என்பது கண்டனத்துக்கு உரியது ஆகும். இந்த சட்ட வரைவை முற்றிலுமாக திரும்பப் பெற வேண்டும். சட்டத் தொழிலின் தன்னாட்சியை மதிக்க வேண்டும் என மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்துகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ராமேசுவரம் மீனவர்களின் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம் தொடங்கியது

சென்னை 25, பிப்ரவரி 2025 : ராமேசுவரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர். எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவங்கள் பல ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த நிலையில், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ராமேசுவரத்தை சேர்ந்த 32 மீனவர்களை இலங்கை கடற் படையினர் நேற்று கைது செய்தனர். இந்த சம்பவம் ஒட்டுமொத்த தமிழக மீனவர்களிடத்தில் அச்சத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து தற்போது வரையிலும் சுமார் 1 1/2 மாதத்தில் இலங்கை கடற்படையினரால் ராமேசுவரம் உள்ளிட்ட 131 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதேபோல இந்த மீனவர்களின் 18 படகுகள் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது. இதனையடுத்து இலங்கை கடற்படையின் கைது நடவடிக்கையை கண்டித்தும், கைதான மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தியும் ராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவ சங்கங்களின் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தியும், இலங்கை கடற்படையை கண்டித்தும் ராமேசுவரத்தில் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 700-க்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்கள், கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் படகுகளைக் கரையோரம் நிறுத்தி வைத்துள்ளனர். நாள் ஒன்றுக்கு ரூ.1 கோடி வரை வருவாய் இழப்பால், 10,000-க்கும் மேற்பட்ட மீன்பிடி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# போபாலில் உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு ‘முழு உலகமும் இந்தியா மீது நம்பிக்கையுடன் உள்ளது’ : பிரதமர் மோடி பெருமிதம்




சென்னை, 25 பிப்ரவரி 2025: 'இந்திய வரலாற்றில் முதல் முறையாக, முழு உலகமும், இந்தியா மீது நம்பிக்கையுடன் உள்ளது' என பிரதமர் மோடி பேசினார்.

மத்திய பிரதேச மாநிலம், போபாலில் நடந்த 2025 உலக முதலீட்டாளர்கள் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றார். அவரை மத்தியப் பிரதேச மாநில முதல்வர் மோகன் யாதவ் வரவேற்றார். நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

இந்தியாவின் மின்சார வாகன புரட்சியில் முன்னணி மாநிலமாக மத்திய பிரதேசம் திகழ்கிறது. வரும் ஆண்டுகளில் இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாகத் தொடரும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது. ஜவுளி, சுற்றுலா மற்றும் தொழில்நுட்பத் துறைகள் கோடிக் கணக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன. உங்கள் அனைவரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த பல முதலீட்டாளர்கள் இன்று இங்கு வந்துள்ளனர். இந்திய வரலாற்றில் முதல் முறையாக முழு உலகமும், இந்தியா மீது நம்பிக்கையுடன் உள்ளது. செழிப்பான தொழில்களுடன், மத்தியப் பிரதேசம் ஒரு விருப்பமான வணிக இடமாக மாறி வருகிறது. மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ., ஆட்சிற்கு பிறகு வளர்ச்சியின் வேகம் இரட்டிப்பாகி உள்ளது. இவ்வாறு அவர் பேசினார். பிரதமர் மோடி வருகையில் தாமதம் ஏற்பட்டது. இதனால் நிகழ்ச்சி தாமதமாக ஆரம்பித்தது. இது குறித்து பிரதமர் மோடி பேசுகையில், 'மாநாடு நிகழ்ச்சிக்கு தாமதமாக வந்ததற்காக அனைவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

10, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு தேர்வு இருப்பது நினைவுக்கு வந்ததால் தாமதமாக கிளம்பி வந்தேன். பாதுகாப்பு காரணங்களுக்காக சாலைகளை மூடப்பட்டால், குழந்தைகள் தேர்வு எழுதுவதற்கு செல்ல தாமதம் ஏற்பட்டது. குழந்தைகள் சரியான நேரத்தில் தேர்வு மையத்தை அடையவே தாமதமாக புறப்பட்டேன்' என குறிப்பிட்டார்.

# இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் தென் மண்டல குழுமத்தின் 2025-26-ம் ஆண்டிற்கான புதிய அலுவலர்களுக்கான தேர்தல்



சென்னை 25, பிப்ரவரி 2025 : இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் தென் மண்டல குழுமத்தின் 262-வது கூட்டம் இன்று (24 பிப்ரவரி 2025) சென்னையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தென்னிந்திய மண்டல குழுமத்தின் 2025-26-ம் ஆண்டிற்கான புதிய அலுவலக அதிகாரிகளுக்கான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் விவரங்கள் பின்வருமாறு: தமிழ்நாடு, சென்னை அலுவலகத்தில் தென்மண்டல குழுமத்தின் தலைவராக திருமதி ரேவதி எஸ் ரகுநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஆந்திரப் பிரதேச மாநிலம் குண்டூர் அலுவலகத்தின் துணைத் தலைவராக திரு சுப்பாராவ் முப்பாலாவும், கேரள மாநிலம் கொச்சி அலுவலகத்தில் செயலாளராக திருமதி தீபிகா வர்கீசும், தெலங்கானா மாநிலம் செகந்திராபாத் அலுவலகத்தின் பொருளாளராக திரு ஒய் வி பானு நாராயணராவ் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆண்டிற்கான தென்னிந்திய பட்டய கணக்காளர் மாணவர் சங்கத்தின் தலைவராக திரு பிரமோத் ராம்மோகன் ஹெக்டே (கர்நாடக மாநிலம் பெங்களூரு) நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் தென் மண்டல குழுமத்தின் தலைவராக பெண் பட்டய கணக்காளரான திருமதி ரேவதி எஸ் ரகுநாதன் 3-வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முன்னாள் பெண் பட்டய கணக்காளரான திருமதி ஆர் சிவபோகத்தை (1955-1958) அடுத்து 3-வது முறையாக திருமதி ரேவதி எஸ் ரகுநாதன் 3-வது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டை இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது

சென்னை 25, பிப்ரவரி 2025 : இந்திய தேர்தல் ஆணையம் அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் இரண்டு நாள் மாநாட்டை புதுதில்லியில் உள்ள இந்திய சர்வதேச ஜனநாயக, தேர்தல் மேலாண்மை நிறுவனத்தில் நடத்த திட்டமிட்டுள்ளது. இந்த மாநாடு 2025-ம் ஆண்டு மார்ச் 4 மற்றும் 5-ம் தேதிகளில் நடைபெறுகிறது.

திரு ஞானேஷ் குமார் தலைமைத் தேர்தல் ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு நடைபெறும் முதல் மாநாடு இதுவாகும். முதன்முறையாக, இம்மாநாட்டில் பங்கேற்க மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் பதிவு அதிகாரி, ஆகியோரை நியமிக்க தலைமைச் செயல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சட்ட ரீதியிலான அதிகார அமைப்புகளாக, தலைமைச் செயல் அலுவலர்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், சட்டமன்றப் பேரவை தொகுதி அளவில் முக்கியப் பணியாளர்களாக உள்ளனர்.

இந்த இரண்டு நாள் மாநாடு மாநிலங்கள் / யூனியன் பிரதேசங் களின் தேர்தல் அதிகாரிகள், தங்களது அனுபவங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கும், விவாதிப்பதற்கும் நல்ல தளமாக அமையும். மாநாட்டின் முதல் நாளில், தகவல் தொழில் நுட்ப கட்டமைப்பு, பயனுள்ள தகவல் தொடர்பு, சமூக ஊடக செயல்பாடுகளை மேம்படுத்துதல், தேர்தல் நடைமுறைகளில் பல்வேறு அமைப்புகளின் சட்ட ரீதியான பங்களிப்பு உள்ளிட்ட நவீன தேர்தல் நிர்வாகத்தின் முக்கிய பகுதிகள் குறித்து விவாதங்கள் நடைபெறும்.

இரண்டாவது நாளில், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகள் முந்தைய நாளில் விவாதிக்கப்பட்ட அம்சங்கள் குறித்த தங்களதுசெயல்திட்டத்தை எடுத்துரைக்கவுள்ளனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# தம்பி கலக்கிட்டான் : மிஸ்டர் எக்ஸ் கவுதம் கார்த்திக்கு ஆர்யா பாராட்டு

சென்னை 25, பிப்ரவரி 2025: லப்பர் பந்து படத்தின் மிகப்பெரிய வெற்றியைத் தொடர்ந்து பிரின்ஸ் பிக்சர்ஸ் ஷி. லஷ்மன் குமார் தயாரிப்பில் மற்றும் கி. வெங்கடேஷ் இணை தயாரிப்பில் மிகப் பிரமாண்டமாக உருவாகி இருக்கும் படம் 'மிஸ்டர் எக்ஸ் வெற்றிப் படமான எப்ஐஆர் படத்தை இயக்கிய மனு ஆனந்த் இந்தப் படத்தை இயக்கி யுள்ளார். ஆர்யா கதாநாயகனாக நடிக்க, கவுதம் கார்த்திக், சரத்குமார், மஞ்சுவாரியார், அனகா, அதுல்யா ரவி, ரைஸா வில்சன், காளி வெங்கட் மற்றும் பலர் நடித்துள்ளனர். படத்திற்கு திபு நிணன் இசையமைத் துள்ளார். அருள் வின்சென்ட் ஒளிப்பதிவு செய்ய, படத்தொகுப்பை பிரசன்னா கவனித்துள்ளார்.

இந்தப் படத்தின் டீசர் மற்றும் ஃபர்ஸ்ட் சிங்கிள் வெளியீட்டு நிகழ்வு நேற்று மாலை சென்னை நெக்ஸஸ் விஜயா மாலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நடிகர் ஆர்யா பேசும்போது, "இந்த படத்துக்கு எனக்கு சிபாரிசு செய்ததே தயாரிப்பாளர் எஸ். லஷ்மன் குமார் தான். இந்தக் கதையைக் கேட்டுவிட்டு இது மிகப்பெரிய பட்ஜெட் ஆகுமே என தயாரிப்பாளரிடம் கேட்ட போது, ரசிகர்களுக்கு பிரமிப்பான திரையரங்கு அனுபவத்தை கொடுப்பதற்காக சமரசம் இல்லாமல் இந்த படத்தை எடுத்து தான் ஆக வேண்டும் என்று தன்னம்பிக்கையுடன் கூறினார். இப்போ இருக்கும் காலகட்டத்தில் ஓடிடி எல்லாவற்றையும் தாண்டி திரையரங் குகளை மட்டுமே நம்பி நாம் படம் எடுக்க வேண்டிய சூழலில் இருக்கி றோம்.

அதற்கு மிகப் பெரிய உதாரணம் தான் லப்பர் பந்து. அதனாலேயே அவர் இந்த கதை மீது ரொம்ப நம்பிக்கை வைத்திருந்தார். இயக்குநர் மனு ஆனந்த் எல்லா வற்றிலும் பர்ஃபெக்சன் ஆக இருக்கக்கூடியவர். எந்த ஒரு காட்சியையும் அழகான முன்கூட்டிய திட்டமிடலுடன் படமாக்கினார். அதனால் தான் திட்டமிட்டதை விட அதிக நாட்கள் எடுக்க வேண்டிய படத்தை சரியான நேரத்திற்குள் எடுத்து முடித்தார்.

இந்தப் படத்திற்காக மும்பையில் தண்ணீருக்கு அடியில் ஒரு காட்சி படமாக்கப்பட்டது அப்போது என்னுடன் சேர்ந்து ஒளிப்பதிவாளரும் தண்ணீருக்குள் டைவ் அடித்து இந்த காட்சிகளைப் படமாக்கினார். இப்படி ஒரு ஒளிப்பதிவாளரை பார்ப்பது ரொம்பவே அரிது. ஆக்சன் படம் என்பதால் இசை ரொம்பவே முக்கியம்.

இசையமைப்பாளர் திபு நிணன் அந்த அளவிற்கு இந்த படத்திற்கு தனது ஒத்துழைப்பைக் கொடுத்துள்ளார். சில்வா மாஸ்டர் கிட்டத்தட்ட 80 நாட்கள் இந்த படத்தில் பணியாற்றினார். படம் முழுவதுமே ஒரு ஆக்சன் மூடு இருக்கும். நிறைய ஆக்சன் காட்சிகள் இருக்கின்றன. கிட்டத்தட்ட படத்தின் இணை இயக்குநர் போலவே அவர் பணியாற்றினார்.

கவுதம் கார்த்திக் ரொம்பவே கூலான, அதே சமயம் ஒரு செக்ஸியான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்த கதாபாத்திரத்திற்காக ஸ்டைலிஷான ஒரு நடிப்பை அவர் கொடுத்துள்ளார். நானும் மனுவும் பேசும் போது கூட "தம்பி கலக் கிட்டான்" என்று தான் அவரது நடிப்பைப் பற்றி கூறுவோம். இந்த கதாபாத்திரத்தை தமிழில் இவரைத் தவிர வேறு யாருமே பண்ண முடியாது என்பது போல சரத்குமாருக்கு என அளவெடுத்து தைத்த சட்டை போன்று அவரது கதாபாத்திரம் அமைந்து விட்டது.

சிங்கிள் ஷாட்டில் ஒரு ஆக்சன் காட்சியில் அவர் நடித்திருந்தார். இப்படி எல்லாம் இந்த வயதில் பண்ண முடியுமா என பிரமித்துப் போனேன். மஞ்சுவாரியார் இந்த படத்தில் கதாநாயகியாக கிடைக்கவில்லை என்றால் என்ன செய்யப் போகிறேன் என தெரியவில்லை என்று மனு ஆனந்த் புலம்பும் அளவுக்கு இந்த படத்தில் அவரது கதாபாத்திரம் ரொம்பவே வலுவானது. கிட்டத்தட்ட ஆறு மாதமாக அவரைப் பின் தொடர்ந்து இந்த படத்திற்கு நடிக்க அழைத்து வந்துள்ளார்.

நாயகி அனகா ஒவ்வொரு காட்சிக்கும் ஏகப்பட்ட சந்தேகங்கள் கேட்பார். ஒரு படத்தில் கூட இவ்வளவு சந்தேகங்கள் கேட்க முடியுமா என ஆச்சரியம் ஏற்பட்டது. ஆனால் அவை ஆரோக்கிய மானதாக இருக்கும்.

அதுல்யா ரவி, ரைஸா வில்சனும் ஆக்சன் ஞாட்சிகளுக்காக தினசரி ஆறு மணி நேரம் ரிகர்சல் எடுத்தார்கள். காரணம் பெண்கள் சண்டை போடு கிறார்கள் என்றால் பார்ப்பதற்கு அது போலியாக இருப்பது போல் இருக்கக் கூடாது என்பதற்காக அவ்வளவு மெனக்கெட்டார்கள். கிட்டத்தட்ட ஒன்றரை வருடமாக இந்த படத்தில் மட்டுமே நடித்தேன். இந்த படம் வெற்றி பெறும் என உறுதியாக நம்புகிறேன்" என்று கூறினார்.

நடிகர் கவுதம் கார்த்திக் பேசும்போது, "இந்தப் படம் நான் எதிர்பார்த்ததை விட நூறு மடங்கு அதிகமாக இருக்கிறது. சண்டைக் காட்சிகளை எப்படி வேண்டுமானாலும் கற்பனை செய்து உருவாக்கலாம். ஆனால் அதில் நடிப்பவர்களை பாதுகாப்பதில் சில்வா மாஸ்டர் மிகுந்த அக்கறை காட்டினார். அது




மட்டுமல்ல ரொம்பவே வித்தியாசமான முறையில் ஆக்சன் காட்சிகளை வடிவமைத்துள்ளார்.

குறிப்பாக க்ளைமாக்ஸில் நடக்கும் இறுதிச் சண்டைக் காட்சிக்காக ரைஸா, அனகா, அதுல்யா ரவி ஆகியோர் கடுமையாக ரிகர்சல் செய்ததை பார்த்து ஆச்சரியப்பட்டு போனேன். மஞ்சு வாரியருடன் முதல் காட்சியில் நடிக்கும் போது அவரைப் பார்த்து பிரமித்துப் போய் அப்படியே நின்று விட்டேன்.

ஏற்கனவே ஒரு படத்தில் நடித்த கையோடு மீண்டும் மிஸ்டர் எக்ஸ் படத்தில் சரத்குமார் சாரும் நானும் இணைந்து நடிக்க ஆரம்பித்து விட்டோம். எப்போதுமே அவர் எனக்கு ஒரு தந்தையைப் போன்ற நபராகவே தெரிவார்.

ஆனால் காட்சிகளில் நடிக்கும் போது என வந்துவிட்டால் என்னை விட அவர் பயங்கர பிட்டாக இருக்கிறார். நான் இந்த திரையுலகில் நுழைந்ததிலிருந்து எனக்கு ரொம்பவே கிரஷ் ஆன ஒரு நடிகர் என்றால் அது ஆர்யா தான். இப்போது வரை ஸ்டைலிஷான, அர்ப்பணிப்பு உணர்வுடன் நடிக்கக் கூடிய நடிகராக அவர் இருக்கிறார். அவருடன் இணைந்து நடிக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது மிகப்பெரிய சந்தோஷம்.

ஆனால் படப்பிடிப்பில் ஒரு பார்த்தபோது ஒரு ஹல்க் போல மிகப் பிரம்மாண்டமாக தோன்றினார். அந்த அளவிற்கு தனது உடலைக் கட்டுக் கோப்பாக பராமரித்து வருகிறார். தூத்துக் குடியில் படப்பிடிப்பு நடைபெற்ற சமயத்தில் அங்கே வெள்ளம் வந்தபோது கூட ஆர்யா தங்கி இருந்த இடத்தில் இருந்து வெளியேறி அங்கிருந்தவர்களிடம் ஜிம் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டிருந்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக அவர் எனக்கு ஒரு ரோல் மாடல் தான்.

இயக்குநர் மனு ஆனந்த்தும் நானும் பல வருடங்களாக இணைந்து பணியாற்ற வேண்டும் என பேசிக் கொண்டிருந்தோம். அப்படிப் பட்ட சமயத்தில் தான் இந்த கதாபாத்திரத்தில் என்னை அழைத்து நடிக்க வைத்துள்ளார். எனக்குள் இருந்த நடிப்புத் திறமையைக் அவர் சரியாகக் கணித்து வெளிக் கொண்டு வந்துள்ளார். நானும் அதைச் சரியாக செய்துள்ளேன் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.

இயக்குநர் மனு ஆனந்த் பேசும்போது, "ஒரு இயக்குநருக்கு இரண்டாவது படம் கிடைக்க வேண்டும் என்றால் அந்த முதல் படம் வெற்றி அடைந் திருக்க வேண்டும். அப்படி ஒரு படத்தைத் தயாரித்து. அதில் நடித்து. எனக்கு இயக்குநராக வாய்ப்பு கொடுத்து கோவிட் காலகட்டத்தில் அந்தப் படத்தை திரை யரங்குகளில் தைரியமாக ரிலீஸ் செய்த விஷ்ணு விஷாலுக்கு இந்த சமயத்தில் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

எஃப்ஐஆர் இல்லை யென்றால் எனக்கு மிஸ்டர் எக்ஸ் வாய்ப்பு கிடைத்திருக்காது. இன்னும் சொல்லப் போனால் எஃப்ஐஆர் பட புரமோஷன் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்த போதே பிரின்ஸ் பிக்சர்ஸில் இருந்து எனக்கு அழைப்பு வந்து விட்டது. சில கதைகள் பேசிய போது அது சரிவர அமையவில்லை. அதன் பிறகு தான் வேறு கதை முடிவு செய்தோம்.

ஆர்யாவுக்காக கதை இருக்கிறதா என்று கேட்டார்கள். ஆனால் ஆர்யா ஒப்புக் கொள்வாரா என்ற சந்தேகம் இருந்தது. திரையுலகில் எனக்கு தெரிந்த பல நண்பர்கள் வட்டாரத்தில் ஆர்யா பற்றி விசாரித்தபோது அவரிடம் கதை சொல்வது வேஸ்ட். ஏனென்றால் கதையை கேட்டுக் கொள்வார். ஆனால் இரண்டு நாட்கள் கழித்து, வேண்டாம் என்று சொல்லி விடுவார் என்று கூறினார்கள்.

அந்த எண்ணத்தில் தான் அவரிடம் கதை சொல்ல சென்றேன். ஆனால் கதை கேட்க ஆரம்பித்த 20வது நிமிடத்தில் இந்த படத்தை நாம் பண்ணுகிறோம் என உறுதி அளித்து விட்டார்.

# வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் மற்றும் வேம் இந்தியா இணைந்து தயாரித்திருக்கும் 'அகத்தியா' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு

சென்னை, 25 பிப்ரவரி 2025: வேல்ஸ் ஃபிலிம் இன்டர் நேஷனல் சார்பில் டாக்டர் ஐசரி கே கணேஷ் மற்றும் வேம் இந்தியா சார்பில் அனீஷ் அர்ஜுன் தேவ் இணைந்து தயாரித்து, ஜீவா, அர்ஜுன், ராஷி கண்ணா நடிப்பில் பா. விஜய் இயக்கத்தில் உருவாகி, வரும் 28ம் தேதி வெளியாகும் 'அகத்தியா' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு சென்னையில் நடைபெற்றது.

பாடலாசிரியர் - நடிகர் - இயக்குநர் பா. விஜய் இயக்கத்தில் உருவாகியுள்ள 'அகத்தியா' திரைப்படத்தில் ஜீவா, அர்ஜுன், ராஷி கண்ணா, ராதாரவி, யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி, எட்வர்ட், மெடில்டா உள்ளிட்ட பலர் நடித்திருக் கிறார்கள். தீபக் குமார் பதி ஒளிப் பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார். படத்தொகுப்பு பணிகளை ஷான் லோகேஷ் கவனிக்க, கலை இயக்கத்தை சண்முகம் மேற்கொண் டிருக்கிறார். ஃபேண்டஸி ஹாரர் திரில்லர் ஜானரில் கமர்ஷியல் என்டர்டெய்னராக தயாராகி இருக்கும் 'அகத்தியா' திரைப்படம் பிப்ரவரி 28ம் தேதி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய இந்திய மொழிகளில் 800க்கும் மேற்பட்ட திரையரங் குகளில் வெளியாகிறது. சென்னையில் நடை பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தயாரிப்பாளர் ஐசரி கே கணேஷ், இயக்குநர் பா.விஜய், நடிகர் ஜீவா, நடிகை ராஷி கண்ணா, ஒளிப்பதிவாளர் தீபக் குமார் பதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நடிகை ராஷி கண்ணா பேசுகையில், ''நான் ஏற்கனவே 'அரண்மனை 3', 'அரண்மனை 4' போன்ற ஹாரர் படங் களில் நடித்திருக்கிறேன். ஆனால் இந்தத் திரைப் படத்தில் ஹாரருடன் புதிய எலிமெண்ட்டும் இருக்கிறது. அதற்காக இயக்குநர் பா. விஜய்க்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்கும் பா விஜயை பாடலாசிரியராக தெரிந் திருக்கும். ஆனால் இந்தப் படம் வெளியான பிறகு அவர் இயக்குநராகவும் வெற்றி பெறுவார். படத்தில் புது எலிமெண்ட் கிளைமாக்ஸில் இடம் பிடித்திருக்கிறது. புது தொழில்நுட்பத்துடன் இணைந்து அது உருவாகி இருக்கிறது. இந்தப் படத்தில் பணியாற்றி யதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த படத்தின் தரத்திற்காக தயாரிப்பாளர் கணேஷ் சார் அர்ப்பணிப்புடன் கூடிய முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார். இப்படம் அவருக்கும் வெற்றி




படமாக அமையும். அவருக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீவா உடன் இணைந்து பணியாற் றுவது மகிழ்ச்சியான அனுபவம். அவருடன் தொடர்ந்து படங்களில் நடிக்க விரும்புகிறேன்.

என் மீது அன்பு செலுத்தி வரும் தமிழ் ரசிகர்களுக்கும், மக்களுக்கும் நன்றி. தொடர்ந்து தமிழ் படங்களில் நடிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறேன்.

இந்தத் திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் நிச்சயமாக கவரும். அனைவரும் திரையரங் கத்திற்கு வருகை தந்து ஆதரவு தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்,'' என்றார்.

இயக்குநரும், நடிகரும், பாடலா சிரியருமான பா. விஜய் பேசுகையில், ''அகத்தியா- வேல்ஸ் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் ஈதிப்பு மிகுந்த திரைப்படமாக உருவாகி இருக்கிறது. இந்நிறுவனத்துடன் வேம் இந்தியா நிறுவனமும் இணைந்து தயாரித் திருக்கிறது.

இது மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் கொண்ட தருணம். இந்தப் படத்தின் கதை எழுதத் தொடங்கிய காலத்தில் இருந்து மிகப்பெரிய தேடல் இருந்தது. முதலில் இந்த கதையை எப்படி ஜனரஞ்சகமாக சொல்ல வேண்டும். அப்படி வெகுஜன ரசனையுடன் சொல்ல வேண்டும் என்றால் வலிமையான தொழில் நுட்ப கலைஞர்களின் கூட்டணி தேவை என்பதை உணர்ந்தேன். அதனால் கதை எழுத தொடங்கும் போது இது வழக்கமான ஹாரர் படமாக இல்லாமல், அதிலிருந்து சற்று வித்தியாசப்பட்டு ஹாரர் ஃபேண்டஸியாகவும் உருவாக்க வேண்டும் என எழுதத் தொடங்கினேன். ஏனெனில் நான் சொல்ல வரும் கன்டென்ட் அனைவரும் ரசிக்கும் வகையில் இருக்க வேண்டும் என விரும்பினேன். இதனால் கதையின் ஒரு மிகப்பெரிய பகுதியை பீரியட் ஃபிலிமாக காட்ட வேண்டிய சூழல் கதை களத்தில் ஏற்பட்டது.

திரைக்கதையை எழுதி முடித்த பிறகு இதனை திரைப்படமாக உருவாக்க வேண்டும் என்றால் பிரம்மாண் டமான பொருட்செலவு செய்யக்கூடிய தயாரிப் பாளர்கள் தேவை. மிகப் பிரபலமான தயாரிப்பு நிறுவனம்- நட்சத்திர நடிகர்களின் பிஸினஸைப் பற்றி கவலைப் படாமல் சொல்ல வரும் கன்டென்ட்டை புரிந்து கொண்டு தயாரிக்கும் தயாரிப்பாளர்களால் மட்டுமே இதனை தயாரிக்க இயலும். அப்படி ஒரு தயாரிப்பாளரை நானும், ஒளிப்பதிவாளர் தீபக் குமாரும் தேட தொடங்கினோம்.

இந்தத் தருணத்தில் தான் நடிகர் ஜீவாவின் தொடர்பு கிடைத்தது. அவருடன் ஏற்கனவே 'களத்தில் சந்திப்போம்' திரைப்படத்தில் சிறிய வேடத்தில் நடித் திருந்தேன். அந்த நட்பின் காரணமாக அவரிடம் இந்தப் படத்தின் கதையை விவரித்தேன். ஜீவாவும், 'ஹாரர் படமா.. வேண்டாமே..!' என தயங்கினார். ஆனால் நானோ, 'இது ஹாரர் படம் இல்லை. ஹாரர் ஃபேண்டஸி படம். இந்த திரைப்படத்தில் நல்ல விஷயம் இருக்கிறது. அது மக்களிடம் சென்றடைய வேண்டும். இது ஒரு ஹாரர் அட்வென்ச்சர் படமும் கூட' என்றேன். அதன் பிறகு அவரும் தயாரிப்பாளரை தேடுகிறேன் என்றார்.

பின்னர் இந்த கதையை நம்பி தயாரிக்கும் ஒரு தயாரிப் பாளர் இருக்கிறார், வாருங்கள் அவரை சந்திப்போம் என்று அழைத்துச் சென்ற இடம் தான் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ். அவரை அவருடைய வீட்டில் சந்தித்தோம். கதையை முழுவதுமாக கேட்டதும் தயாரிக்க ஒப்புக்கொண்டார். அதன் பிறகு அனைத்து பணிகளையும் ஒருங் கிணைத்தார். நாங்கள் கேட்டது, கேட்க நினைத்தது, கேட்கத் தயங்கியது, இதை யெல்லாம் கேட்கலாமா என்று யோசித்தது என அனைத்தையும் அவராக முன்வந்து செய்து கொடுத்தார். இந்த திரைப்படத்தில் பான் இந்திய நட்சத்திர நடிகையான ராஷி கண்ணா இடம் பிடித்தார். அதன் பிறகு மற்றொரு அழுத்தமான வேடத்தில் நடிக்க அர்ஜுன் பொருத்தமாக இருப்பார் என்று சொன்னோம். அவர் இந்தப் படத்தில் இணைந்தார். அதன் பிறகு சில ஹாலிவுட் நட்சத்திர நடிகர்கள் நடித்தால் கதையில் நம்பகத்தன்மை அதிகம் இருக்கும் என்று சொன்னேன். மெடில்டா எனும் ஹாலிவுட் நடிகையும், 'ஆர் ஆர் ஆர்' படத்தில் நடித்த எட்வர்ட் சொனன் பிளேக் என்ற நடிகரும் இணைந்தார்கள். அதன் பிறகு யோகி பாபு, விடிவி கணேஷ், ரெடின் கிங்ஸ்லி , ராதாரவி என மிகப் பெரிய நட்சத்திர பட்டாளங்கள் படத்தில் பணியாற்றினர். இந்தப் படத்தின் கதைகளத் திற்காக ஏராளமான அரங்குகள் அமைக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அனைத்தும் பிரம்மாண்டமான பொருட்செலவில் உருவாக்க வேண்டியதாக இருந்தது. அதற்கும் அவர் சம்மதம் தெரிவித்தார்.

டாக்டர் ஐசரி கணேஷின் தயாரிப்பு நிறுவனத்தில் பணியாற்றும் இயக்குநர்களுக்கு மிகப்பெரிய படைப்பு சுதந்திரம் கிடைக்கும். இயக்குநர்கள் ஒரு காட்சிக்கு மயில் தோகை வேண்டும் என கேட்டால் தயாரிப் பாளர் மயில் ஒன்றை கொண்டு வந்து தருவார். இதுதான் அவரின் பண்பு. இதுதான் அவர் சினிமா மீது வைத்திருக்கும் கட்டற்ற நேசம், அளவற்ற காதல். இதை பார்த்து நான் பல தருணங்களில் வியந்து இருக்கிறேன்.

65 நாட்களில் படப் பிடிப்பை நிறைவு செய்தோம். படத் தொகுப்பு பணிகளை நிறைவு செய்த பிறகு 90 நிமிடங்களுக்கு வி எஃப் எக்ஸ் பணிகள் மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதற்காக ஓராண்டு காலம் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களின் கூட்டு ஒத்துழைப்புடன் பணிகள் முழு வீச்சில் நடைபெற்றன. அந்தப் பணிகளையும் அண்மையில் நிறைவு செய்தோம். உச்சகட்ட காட்சி ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கும் என்று நம்புகிறேன். அந்த காட்சிக்கான பணிகளை 'டாக்டர் ஸ்ட்ரேஞ்சர்' உள்ளிட்ட ஹாலிவுட் படங்களுக்கு வி எஃப் எக்ஸ் பணிகளை மேற்கொண்ட முன்னணி நிறுவனத்திடம் வழங்கினோம். இந்த இறுதிக் காட்சியில் அனிமேஷன் கதாபாத் திரங்களுடன் கூடிய சண்டைக் காட்சியை பிரம்மாண்டமாக அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் காட்சி படத்திற்கு வலிமை சேர்க்கும் என நம்புகிறேன்.

'ஒரு இயக்குநர் எழுதிய திரைக்கதை முழுவதுமாக காட்சி வடிவில் செதுக்கப்பட் டிருந்தால், அந்தப் படம் இயக்குநருக்கு திருப்தி அளித்தால், அதுதான் நல்ல படைப்பாக உருவாகும்' என என்னுடைய குருநாதர் கே பாக்யராஜ் சொல்வார். இந்த படத்தின் முதல் பிரதியை பார்வையிடும் போது எனக்கு அந்த மனநிறைவு ஏற்பட்டது. இதற்கு காரணம் தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் அவர்கள் தான். அவருக்கு வானில் உள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையின் அளவில் நன்றியை சொன்னாலும் போதாது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# பிரதீப் ரங்கநாதனுக்கு “டிராகன்” சூப்பர் ஹிட் பிளாக்பஸ்டர் படம்!

சென்னை, 25 பிப்ரவரி 2025: ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிப்பில் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் பிரதீப் ரங்கநாதன், அனுபமா பரமேஸ்வரன், கயாடு லோஹர், மிஷ்கின், கே.எஸ். ரவிக்குமார், கௌதம் மேனன், விஜே சித்து மற்றும் அஸ்ரத் கான் உள்ளிட்ட பலர் நடித்துள்ள டிராகன் படம் இன்று வெளியானது.

படத்தின் டிரெய்லரை பார்த்ததுமே பலரும் இது டான் படத்தின் காப்பியா என கேள்வி எழுப்பினர். மொட்டை மாடி பார்ட்டியில் பிரதீப் ரங்கநாதனும் இது டான் 2 தான் என்பதை இயக்குநர் மறைத்து விட்டார் என்றார். உண்மையாகவே படம் டான் படத்தின் காப்பியா? அல்லது இந்த டிராகன் படம் என்ன சொல்கிறது என்பது குறித்து இங்கே பார்ப்போம்.

பிரதீப் ரங்கநாதன் இளைஞர்களை கெடுப்பதாக ஒரு இளம் பெண் பேசிய வீடியோ தீயாக பரவிய நிலையில், இந்த டிராகன் படத்தில் இளைஞர்களை கெடுக்கும் விதமாக படத்தை இயக்குநர் எடுத்துள்ளாரா? அல்லது இன்றைய இளைஞர்களுக்கு அட்வைஸ் கொடுத்துள்ளாரா என்பது குறித்து விரிவாக பார்க்கலாம் வாங்க..

டிராகன் கதை: இன்ஜினியரிங் கல்லூரியில் 48 அரியர் வைத்து விட்டு பிரின்ஸிபல் மிஷ்கினிடம் இந்த படிப்பே வேண்டாம் என ஐடி கார்டை தூக்கிப் போட்டு விட்டு செல்லும் ஹீரோ வேலைக்கு சென்று சம்பாதிப்பது போல வீட்டில் பெற்றோர்களை ஏமாற்றி விட்டு ஊதாரியாக நண்பர்கள் வீட்டில் பிக் பாஸ் பார்த்துக் கொண்டிருக்கும் வேலையை செய்கிறார். கல்லூரியில் படிக்கும் போது ரவுடியாக இருக்கும் பசங்கள பெண்களுக்கு பிடிக்கும் என்றும் அதே காரணத்திற்காக அனுபமா பரமேஸ்வரன் டிராகன் எனும் டி. ராகவனை காதலித்து வருகிறார். ஆனால், காலேஜ் வாழ்க்கை முடிந்த பின்னர் தான் வேலை வெட்டி செய்யாதவனை திருமணம் செய்துக் கொள்ள முடியாது என புரிய வந்து அவனை பிரேக்கப் செய்து பிரிகிறார்.



அதன் பின்னர், ஹீரோ திருந்துகிறாரா என்று பார்த்தால் அதுதான் இல்லை. போலியாக டிகிரி சர்ட்டிபிகேட் வாங்கி, பெரிய நிறுவனத்தில் வேலைக்குச் சேர்கிறார். கௌதம் மேனன் மேனேஜராக இருக்கும் கம்பெனியில் வேலைக்குச் சேரும் அவருக்கு பெரிய தொழிலதிபரான கே.எஸ். ரவிக்குமாரின் மகளான கயாடு லோஹரை திருமணம் செய்ய நிச்சயம் ஆகிறது. ஆனால், அதன் பின்னர் நடக்கும் ட்விஸ்ட்டு காரணமாக டிராகனின் வாழ்க்கை ரிட்டர்ன் ஆஃப் தி காலேஜ் ஆக மாற இரண்டாம் பாதியும் கிளைமேக்ஸ் காட்சிகளும் இளைஞர்களுக்கான பாடமாக அமைவது தான் இந்த டிராகன் படத்தின் கதை.

படம் எப்படி இருக்கு?: பிரதீப் ரங்கநாதன் லவ் டுடே படத்திற்கு பிறகு இந்த படத்தில் நடிகராக ரொம்பவே மெருகேறியுள்ளார். முதல் சீனில் இருந்து கடைசி காட்சி வரை நடிப்பால் மிரட்டுகிறார். காமெடி காட்சிகளும், டைமிங்கும் ரசிகர்களை தியேட்டரில் சிரிக்க வைத்துக் கொண்டே இருக்கிறது. ஹீரோ மட்டும் சிரிக்காமல் மற்றவர்கள் அனைவரையும் சிரிக்க வைக்கும்படியான படமாக இந்த டிராகன் படம் உள்ளது. அதிலும், "மாட்டிக்கினாரு ஒருத்தரு அவரை காப்பத்தணும் கர்த்தரு" பாடல் காட்சிகள் எல்லாம் வேறலெவல் ஃபன்.

அனுபமா பரமேஸ்வரன் காதலியாகவும் வேறு ஒருவரை திருமணம் செய்துக் கொள்ள பிரதீப் ரங்கநாதனை பிரேக்கப் செய்யும் இடங்களிலும் நடிப்பால் அப்ளாஸ் அள்ளுகிறார். அவருடைய போர்ஷன் அங்கேயே முடியாமல் இரண்டாம் பாதியில் எதிர்பாராத கம்பேக்காக அமைவது தான் படத்தின் பிளஸ். பிரேமம், டான் என அனைத்து படங்களையும் வச்சு செய்துள்ளார் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து. ஏமாற்றினால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. படித்தால் தான் முன்னேற முடியும். குறுக்கு வழி என்றுமே சறுக்கி விட்டு விடும் என்பதை மிஷ்கினை வைத்து சொல்லியிருக்கும் மெசேஜ் இளைஞர்களுக்கு தேவையான பாடமாக அமைந்துள்ளது.

பிரதீப் ரங்கநாதன் - மிஷ்கின் கெமிஸ்ட்ரி தான் படத்திற்கு பெரிய பலம். அனுபமா பரமேஸ்வரன், கௌதம் மேனன், கயாடு லோஹர், பிரதீப் ரங்கநாதனின் அப்பாவாக நடித்துள்ள ஜார்ஜ் மரியம் என நடிகர்கள் அனைவரையும் இயக்குநர் அஷ்வத் மாரிமுத்து வீணடிக்காமல் நல்லா பயன்படுத்தியிருப்பது சிறப்பு. அவருக்கு பக்க பலமாக இசையமைப்பாளர் லியோன் ஜேம்ஸின் பாடல்களும் பின்னணி இசையும் இளைஞர்களை ஆட்டம் போட வைக்கின்றன. ஆக்ஷன் வேண்டுமா ஆக்ஷன் இருக்கு, பாட்டு வேண்டுமா பாட்டு இருக்கு, காமெடி வேண்டுமா காமெடி இருக்கு, கருத்து வேண்டுமா கருத்து இருக்கு என பக்கா பேக்கேஜ் படமாக கொடுத்திருக்கிறார் அஷ்வத் மாரிமுத்து. 48 அரியர் வச்சி டிகிரி வாங்கிநவனாலையும் வேலைக்கு சேர்ந்து முதலிடத்துக்கு வர முடியும் அப்படின்னு இயக்குனர் கூறியிருக்கிறார்.

கூட்டுமொத்த படமாக இந்த டிராகன் என்டர்டெயின்மென்ட் பண்ணிக் கொண்டே இளைஞர்களுக்கு படிப்பு எந்தளவுக்கு முக்கியம் என்கிற பாடத்தை நடத்துவதால் கண்டிப்பாக பிரதீப் ரங்கநாதனுக்கு அடுத்த பிளாக்பஸ்டர் படமாக மாறும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அடிக்கடி வரும் கேமியோ சர்ப்ரைஸ்களை விட கிளைமேக்ஸ் கேமியோ

# ‘லெவன்‘ படத்திற்காக டி. இமான் இசையில் ஆண்ட்ரியா பாடி, ஆடி அசத்தும் ‘தமுகு‘ பாடல் தமிழ், தெலுங்கு என இரு மொழி வரிகளைக் கொண்டு உருவான பிரத்யேகப் பாடல் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது

சென்னை, 25 பிப்ரவரி 2025: ஏ ஆர் என்டர்டைன்மென்ட் தயாரிப்பில் லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் நவீன் சந்திரா நடிப்பில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகியுள்ள விறுவிறுப்பான புலனாய்வு திரில்லர் 'லெவன்'. இப்படத்திற்காக 'தமுகு' எனும் சிறப்பு பாடல் உருவாக்கப்பட்டு சரிகம தமிழ் யூடியூப் பக்கத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

டி. இமான் இசையில், ராகேண்டு மௌலி வரிகளில் உருவான இப்பாடலை பிரபல நடிகை ஆண்ட்ரியா ஜெரேமியா பாடியுள்ளதோடு இமானுடன் சேர்ந்து நடனமும் ஆடியுள்ளார். தமிழ், தெலுங்கு என இரு மொழி வரிகளைக் கொண்டு உருவாகியுள்ள இந்த பிரத்யேகப் பாடல் இணையத்தில் வைரல் ஆகி வருகிறது.

பாடலை பற்றி பேசிய இயக்குநர் லோகேஷ் அஜில்ஸ், "பரபரப்பான கிரைம் திரில்லரான 'லெவன்' படத்தின் கதைக் கேற்றவாறு இப்பாடல் உருவாக்கப்பட்டுள்ளது.

திரைப்படம் தமிழ் மற்றும் தெலுங்கில் எடுக்கப்பட்டுள்ளதால், தமிழ் மற்றும் தெலுங்கு வரிகளைக் கொண்டு பாடலை உருவாக்கி யுள்ளோம். இதன் காரணமாகவே இதற்கு தமுகு என்று பெயரிட்டுள்ளோம்," என்றார். கோடை விடுமுறையின் போது 'லெவன்' படத்தை திரையரங்குகளில் வெளியிட திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

'சில நேரங்களில் சில மனிதர்கள்' மற்றும் 'செம்பி' ஆகிய பெரிதும் பாராட் டப்பட்ட வெற்றி படங்களை தொடர்ந்து விறுவிறுப்பான புலனாய்வு திரில்லரான 'லெவன்' படத்தை தங்களது மூன்றாவது படைப்பாக ஏ ஆர் என்டர்டைன்மென்ட் நிறுவனத்தின் சார்பில் அஜ்மல் கான் மற்றும் ரியா ஹரி தயாரித்துள்ளனர். இயக்குநர் சுந்தர் சி யிடம் 'கலகலப்பு 2', 'வந்தா ராஜாவா தான் வருவேன், மற்றும் 'ஆக்ஷன்' ஆகிய திரைப்படங்களில் இணை இயக்குநராக பணியாற்றிய லோகேஷ் அஜில்ஸ் இந்த திரைப்படத்தை இயக்கியிருக்கிறார்.

தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகியுள்ள இத்திரைப் படத்தில் பிரபல தெலுங்கு நடிகர் நவீன் சந்திரா நாயகனாக நடித்திருக்கிறார்.



'சரபம்', 'சிவப்பு', 'பிரம்மன்', 'ஜிகர்தண்டா டபுள் எக்ஸ்' மற்றும் 'கேம் சேஞ்சர்' உள்ளிட்ட தமிழ் படங்களிலும் இவர் நடித்துள்ளார். 'சில நேரங்களில் சில மனிதர்கள்' படத்தில் நடித்துள்ள ரியா ஹரி நாயகியாக நடித்திருக் கிறார். இப்படத்தில் 'விருமாண்டி' புகழ் அபிராமி, 'வத்திக்குச்சி' புகழ் திலீபன், 'மெட்ராஸ்' புகழ் ரித்விகா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத் திரங்களில் நடித்திருக் கின்றனர்.

இப்படத்திற்கான இசையை டி. இமான் அமைக்க, பாலிவுட்டில் பணியாற்றிய அனுபவமுள்ள கார்த்திக் அசோகன் ஒளிப் பதிவை கவனித் திருக்கிறார். படத் தொகுப்பை தேசிய விருது பெற்ற ஸ்ரீகாந்த் என்.பி. கையாண் டுள்ளார். 'லெவன்' திரைப்படம் குறித்த தகவல்களை பகிர்ந்து கொண்ட இயக்குநர் லோகேஷ் அஜில்ஸ், "ஆரம்பம் முதல் இறுதி வரை பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டு வரும் விறுவிறுப்பான புலனாய்வு திரில்லராக 'லெவன்' அமையும். திறமைமிக்க நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் இப்படத் திற்காக இணைந் துள்ளார்கள். அவர்களுக்கும் இப்படத்தின் தயாரிப்பாளர்களுக்கும் எனது நன்றி. அனைவரையும் கவரும் விதத்தில் திரைப்படம் அமையும் என்று நம்புகிறேன்," என்று கூறினார். கூ ஆர் என்டர் டைன்மென்ட் பேனரில் அஜ்மல் கான் மற்றும் ரியா ஹரி தயாரிப்பில் லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் நவீன் சந்திரா நடிப்பில் தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் உருவாகியிருக்கும் திரைப்படமான 'லெவன்' வெளியீட்டு தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

# ஹிஸ்டாரிக்கல் கலந்த ஹாரர் படம். “மடல்” ஹரிசங்கர் ரவீந்திரன் இயக்குகிறார். வரலாற்றில் நடந்த உண்மைச் சம்பவத்தை வைத்து உருவாக்கப்பட்டுள்ள படம் “மடல்”

சென்னை, 25 பிப்ரவரி 2025: கலெக்டியஸ் குழுமத்தின் - நிர்வாக இயக்குனர்களில் ஒருவராக இருந்துவரும் பிரசாந்த் ஜேசன் சாமுவேல் தனது புதிய தயாரிப்பு நிறுவனமான றியிஷி பிக்சர்ஸ் சார்பில் பிரமாண்டமாக தயாரிக்கும் படம் " மடல்"

சிலநேரங்களில் சில மனிதர்கள், அன்பிற்கினியாள், போன்ற படங்களில் நடித்த பிரவீன் ராஜா இந்த படத்தின் கதாநாயகனாக நடிக்கிறார். சந்தானம் நடித்த இங்க நாங்க தான் கிங்கு படத்தில் கதாநாயகியாக நடித்த பிரியாலையா இந்த படத்தின் கதாநாயகியாக நடிக்கிறார். மற்றும் நிழல்கள் ரவி, பாலசரவணன், விவேக் பிரசன்னா, கிருஷ்ண தயாள் ஆகியோருடன் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

ஒளிப்பதிவு - ரீகாந்த். இசை - சுனில், பாடல்கள் - கார்த்திக் நேத்தா, எடிட்டிங் - கமல், கலை இயக்குனர் - சௌந்தர், தயாரிப்பு மேற்பார்வை - ஹக்கீம், எக்ஸிக்யூட்டிவ் ப்ரொடியூசர் - மக்கள் தொடர்பு - புவன் செல்வராஜ், தயாரிப்பு - பிரசாந்த் ஜேசன் சாமுவேல், கதை, திரைக்கதை, வசனம், எழுதி இயக்குகிறார் ஹரிசங்கர் ரவீந்திரன்.

படம் பற்றி இயக்குனர் ஹரிசங்கர் ரவீந்திரன் பேசியதாவது.. ஹிஸ்டாரிக்கல் கலந்த



ஹாரரர் படம் இது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வரலாற்றில் நடந்த நம் தமிழ் கலாச்சாரம் பற்றிய ஒரு உண்மை சம்பவத்தை மையமாக வைத்து இந்த திரைக்கதையை உருவாக்கியுள்ளோம்.

யூமிழ் சினிமாவில் ஹாரரில் இதுவரை யாரும் நெருங்காத புதிய கதைக்களத்தை இந்த படத்தில் பார்க்கலாம். ரசிகர்களுக்கு ஒரு புது அனுபவத்தை தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றார் இயக்குனர் ஹரிசங்கர் ரவீந்திரன். இந்த படத்தின் பூஜை இன்று சாலிகிராமத்தில் உள்ள பிரசாத் லேபில் பிரம்மாண்டமாக நடைபெற்றது நடிகர் மணிகண்டன் ஞுாலந்து கொண்டு குத்து விளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தார். படத்தின் படப்பிடிப்பு மார்ச் மாதத்தில் துவங்குகிறது.

# சென்னை, எஸ்ஆர்எம் அதிபருக்கு ஐசிடி கௌரவ பெல்லோஷிப்பை வழங்குகிறது

சென்னை, 25 பிப்ரவரி 2025: சர்வதேச பல் மருத்துவக் கல்லூரி (ஐசிடி) பிரிவு ஆறு (இந்தியா, இலங்கை மற்றும் நேபாளம்) டாக்டர் டி.ஆர்.பாரி வேந்தருக்கு மதிப்புமிக்க கௌரவ பெல்லோஷிப்பை வழங்கியுள்ளது. பாரி வேந்தர், எஸ்ஆர்எம் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜியின் (எஸ்ஆர்எம்ஐஎஸ்தி) நிறுவனர் அதிபர். இந்த சிறப்புமிக்க கூட்டுறவு டாக்டர் பாரிவேந் தருக்கு வழங்கப் பட்டது, இது பல் மருத்துவர் அல்லாத/ மருத்துவம் அல்லாத வர்களுக்கு அரிதாகவே வழங்கப்படும். இந்த கௌரவமானது கல்வி



மற்றும் சுகாதாரத் துறைகளில் அவர் ஆற்றிய பங்களிப்பை அங்கீகரிக்கிறது.

எஸ்ஆர்எம் காட்டாங்குளத்தூர் பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவ மனையுடன் இணைந்து காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்ஆர்எம் ஐஎஸ்டியில் நடைபெற்ற ஐசிடியின் ஆண்டுக் கூட்டம் மற்றும் பட்டமளிப்பு விழாவில் பாரிவேந்தர் இரு துறைகளிலும் சிறப்பான பங்களிப் பிற்காக அங்கீகரிக்கப் பட்டார். சிறப்பு விருந்தினர்கள். தனது ஏற்புரையில், டாக்டர் பாரிவேந்தர் பல் மருத்துவத்தின் தனித் துவமான முக்கியத் துவத்தை எடுத் துரைத்தார், தனிநபர்கள் நிமிர்ந்து நடக்கவும், தெளிவாகப் பேசவும், தன்னம்பிக் கையுடன் சிரிக்கவும் உதவுவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது என்று கூறினார். மருத்துவம் சாராத அவரை, இத்தகைய மதிப்புமிக்க அங்கீகாரத்துடன் கௌரவித்த ஐ.சி.டி.க்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தாழ்த்தப்பட்டோருக்கு இலவசமாக பல் சிகிச்சை அளிக்கப்படும் எஸ்ஆர்எம் காட்டாங் குளத்தூர் பல் மருத்துவக் கல்லூரியில் மனிதாபிமானப் பணிகளை அவர் வலியுறுத்தினார். “நாங்கள் ஏழைகளை மட்டும் நடத்து வதில்லை; அவர்களை சிரிக்க வைக்கிறோம். ஏழைகளுக்கு சேவை செய்வது உண்மையிலேயே கடவுளுக்குச் செய்யும் சேவையாகும்,” என்று அவர் கூறினார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# ஏஐஎம்ஏ நிர்வாக இந்திய விருதின் 'தசாப்தத்தின் சிறந்த வணிகத் தலைவர்' விருதைப் பெற்றார் ஜேஎஸ்டபிள்யு குழுமத் தலைவர் சஜ்ஜன் ஜிந்தால்

சென்னை 25, பிப்ரவரி 2025: ஜேஎஸ்டபிள்யு குழுமத்தை உலகளாவிய கூட்டு நிறுவனமாக விரிவுபடுத்துவதில் ஆற்றிய மாற்றத்தக்க தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் விதமாக ஜேஎஸ்டபிள்யு குழுமத் தலைவர் சஜ்ஜன் ஜிண்டாலுக்கு 15வது ஏஐஎம்ஏ மேனேஜிங் இந்தியா விருதுகளில் 'தசாப்தத்தின் சிறந்த வணிகத் தலைவர்' என்ற விருது வழங்கப்பட்டது.



மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தலைமை விருந்தினராக கலந்துகொண்டார். இவருடன், வர்த்தகம் மற்றும் தொழில்துறை; மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் திரு. ஜிதின் பிரசாதா கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். இவர்களின் முன்னிலையில் இன்று நடைபெற்ற விழாவில் திரு.ஜிண்டாலுக்கு விருது வழங்கப்பட்டது. இந்த விருதினை கேபிஎம்ஜி இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி திரு. யெஸ்டி நாக்போர்வாலா அறிவித்தார். திரு. ஜிண்டாலின் தலைமையின் கீழ், ஜேஎஸ்டபிள்யு குழுமம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது, அதன் வருவாயை இரட்டிப்பாக்கி 24 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது. அவரது வணிக ரீதியான தொலை நோக்குப் பார்வை ஜேஎஸ்டபிள்யு அதன் வருடாந்திர எஃகு உற்பத்தி திறனை கிட்டத்தட்ட மூன்று மடங்காக உயர்த்தி 39 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் சிமெண்ட் உற்பத்தியில் குழுவை ஒரு முக்கிய சக்தியாக நிறுவியுள்ளது.

இந்தியாவின் உள்கட்டமைப்பு நவீனமயமாக்கல் முயற்சிகளுடன் ஜேஎஸ்டபிள்யு குழுமத்தை இணைப்பதில் திரு. ஜிண்டாலின் பங்கை இந்த விருது அங்கீகரிக்கிறது. அவரது தலைமையின் கீழ், ஜேஎஸ்டபிள்யு இந்தியாவின் துறைமுகத் துறையில் இரண்டாவது பெரிய தனியார் நிறுவனமாக உருவெடுத்துள்ளது. அதே நேரத்தில் சர்வதேச கூட்டாண்மைகள் மூலம் மின்சார வாகனங்கள் மற்றும் இராணுவ ட்ரோன்கள் உள்ளிட்ட எதிர்காலத்தை மையமாகக் கொண்ட துறைகளிலும் இறங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய மேலாண்மை சங்கத்தின் (ஏஐஎம்ஏ) மேலாண்மை இந்தியா விருதுகள் ஆனது இந்தியாவின் வணிக நிலப்பரப்புக்கு சிறந்த பங்களிப்புகளைக் கொண்டாடுகின்றன. இந்த விருதுகளின் 15வது பதிப்பிற்காக, புகழ்பெற்ற விருது வென்றவர்கள், தொழில்துறை தலைவர்கள் மற்றும் ஏஐஎம்ஏ அலுவலக பொறுப்பாளர்கள் ஒன்றிணைந்தனர்.

# மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காணவிட்டால் பாஜக ஆட்சிக்கு எதிராக மீனவர்களை திரட்டி தமிழகம் முழுவதும் மிகப்பெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் - கு. செல்வப்பெருந்தகை

சென்னை, 25 பிப்ரவரி 2025: ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ் வரம் மீனவர்கள் மன்னார் வடக்கு பகுதியில் உள்ள கடற்பரப்பில் நேற்று இரவு மீன் பிடித்துக் கொண்டு இருந்தபோது ஐந்து விசைப் படகுகளை பறிமுதல் செய்து 42 மீனவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். கைது செய்யப்பட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை ராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணைக்கு பிறகு கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட் டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கதையாக நிகழ்ந்து வருகிறது. இதுகுறித்து தமிழக முதலமைச்சர் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கருக்கு கடிதம் எழுதி மீனவர்களை உடனடியாக விடுவிக்க தூதரக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

கடந்த ஜனவரி 26 ஆம் தேதி 34 மீனவர்கள் கைது செய்யப் பட்டனர். கடந்த பிப்ரவரி 5 ஆம் தேதி 16 மீனவர்கள் விடுதலை செய்யப் பட்டு அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமை யாக்கப்பட்டன. அதில் 3 மீனவர்களுக்கு தலா இலங்கை ரூபாய் 60 லட்சமும், மேலும் 16 மீனவர்களுக்கு ரூ 50,000 ஒவ்வொரு வருக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அபராதம் கட்ட தவறினால் 6 மாதம் சிறை தண்டனையும் நீதிமன்றம் உத்தர விட்டிருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மீனவர் கைது இருக்காது, படகுகள் பறிமுதல் இருக்காது என்று 2014 இல் கடல்தாமரை மாநாடு நடத்தி நீலிக்கண்ணீர் வடித்த பாஜகவினர் ஆட்சியில் தான் இத்தகைய தொடர் கைதுகள் மூலம் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் சீரழிக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய பாஜக ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளில் 3,544 மீனவர்கள் இலங்கை கடற்படை யினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளனர். இலங்கை சிறையில் நீதிமன்ற காவலில் உள்ள 50 க்கும் மேற் பட்ட மீனவர்களையும், 6 முதல் 2 வருடம் வரையிலும் தண்டனை கைதிகளாக உள்ள 20 க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களையும் விடுவிக்க கோரி ராமேஸ்வரத்தில் பிப்ரவரி 28 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் தான் மீண்டும் 42 மீனவர்கள் கைது செய்யப்பட் டிருக்கிறார்கள். இப்பிரச்சனையை நிரந்தரமாக தீர்ப்பதற்கு 140 கோடி மக்களை ஆட்சி செய்கிற பிரதமர் மோடி வெறும் 2 கோடி மக்களை ஆட்சி செய்கிற சின்னஞ்சிறிய அண்டை நாடான இலங்கை அதிபரோடு பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தர தீர்வு காணமுடியவில்லை என்றால் ஒன்றிய பாஜக அரசின் கையாளாக தனத்தை தான் வெளிப்படுத்துகிறது.

கடந்த காலங்களில் இலங்கை அதிபராக இருந்த ஜெயவர்த்தனே ஆட்சியில் நிகழ்த்தப் பட்ட முற்றுகை நடவடிக்கை காரண மாக யாழ்ப்பாணம் பகுதி தமிழர்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டது. அதை உணர்ந்த அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் அனுமதி கோரினார்.

இலங்கை அரசு அனுமதி மறுத்த நிலையில் 32 விசை படகுகள் மூலமாக நிவாரணப் பொருட்கள் யாழ்ப்பாணம் பகுதிக்கு இந்திய அரசு அனுப்பியது. அதை இலங்கை அரசு தடுத்த காரணத்தால் 1987 ஆம் ஆண்டு ஜூன் 4 அன்று பெங்களூர் விமான நிலையத்தில் இருந்து 6 இந்திய விமானப்படை விமானங்கள் மூலமாக 25 டன் நிவாரணப் பொருட்கள் இலங்கை எல்லையை மீறி வான் வழியாக யாழ்ப்பாணம் பகுதியில் வாழ்கிற தமிழர்களுக்கு தலைவர் ராஜீவ் காந்தி வழங்கியதை இங்கே நினைவு படுத்த விரும்புகிறேன். இந்த நடவடிக் கையை ஆபரேஷன் பூமாலை என்று அழைக்கப் பட்டது. தமிழக மீனவர் பிரச்சனைகளுக்கு தீர்வு காண இந்திய இலங்கை கூட்டுப் பணிக்குழு கடந்த நவம்பர் 5, 2016 அன்று அமைக்கப் பட்டது. பிரச்னைக்கு தீர்வு காண 6 மாதங் களுக்கு ஒருமுறை அக்குழு கூடி பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும். அதன்படி கடந்த 8 ஆண்டுகளில் 16 முறை அந்த கூடடம் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால் 6 முறை தான் அந்த கூட்டம் நடத்தப்பட் டிருக்கிறது. கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 25 க்கு பிறகு கூட்டுப்பணிக்குழு கூட்டப்படவே இல்லை. இதன் மூலம் ஒன்றிய பாஜக அரசுக்கு மீனவர்கள் பிரச்னையை தீர்ப்பதில் அக்கறை இல்லை என்பதை ஞறுதிப் படுத்தப்படுகிறது. இக்குழு கூட்டத்தை உடனடியாக கூட்டவேண்டும் என தமிழக முதலமைச்சர் கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார். எனவே, நடப் பாண்டில் மட்டும் 50 நாட்களில் 109 மீனவர்கள் கைது செய்யப்பட்டு 16 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண பிரதமர் மோடி உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனில் பாஜக ஆட்சிக்கு எதிராக தமிழக மீனவர்களை திரட்டி மிகப்பெரிய கண்டன ஆர்ப்பாட் டங்கள் தமிழகம் முழுவதும் நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என எச்சரிக்கிறேன்.

# கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை

சென்னை, 25 பிப்ரவரி 2025: கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (23.02.2025) சென்னை, கொளத்தூரில் நடைபெற்ற கொளத்தூர் கிழக்குப் பகுதிச் செயலாளரும், தி.மு.க. ஐ.சி.எப். லேபர் யூனியன் பொதுச் செயலாள ருமான திரு. வ. முரளிதரன் - திருமதி. லதா தம்பதியரின் மகன் மகேஷ்வர் மற்றும் திவ்யகணபதி ஆகியோரது திருமணத் தைத் தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி, ஆற்றிய உரை.

நம்முடைய அன்பான வாழ்த்துகளோடு கொளத்தூர் கிழக்குப் பகுதியின் செயலாளர் நம்மடைய ஐ.சி.எஃப் முரளி அவர்களின் இல்லத்தில் நடைபெறக்கூடிய மணவிழா இது. அவர் நன்றியுரை ஆற்றுகின்ற போது பேசமுடியாத சூழ்நிலைக்கு அவர் தள்ளப்பட்டு, உணர்ச்சி ததும்ப "எங்கள் குடும்பம் விசுவாசமாக இருக்கும். உங்கள் குடும்பத்திற்கும் விசுவாசமாக இருக்கும்" என்றெல்லாம் எடுத்துச் சொன்னார். நான் முரளி அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது எங்கள் குடும்பம், உங்கள் குடும்பம் என்று பிரிக்கவேண்டாம். இது நம்முடைய குடும்பம். அப்படிப்பட்ட குடும்பத்தை, ஒரு குடும்பப் பாச உணர்வோடு உருவாக்கித் தந்திருக்கக் கூடியவர் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தோழர்களைப் பார்த்து, தம்பி, தம்பி என்றுதான் அழைப்பார். அதே போல, நம்முடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரையும் பார்த்து வயது முதிர்ந்தவராக இருந்தாலும், இளைஞ ராக இருந்தாலும், உடன்பிறப்பே என்று அழைக்கக்கூடியவர். இந்த இயக்கத்தை ஒரு குடும்பப் பாச உணர்வோடு உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட உணர்வோடு தான் நம்முடைய குடும் பத்தில் நடைபெறக் கூடிய மணவிழா நிகழ்ச்சியாகக் கருதி, நானும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவதற்குக் கடமைப்பட் டிருக்கிறேன்.

1983-ஆம் ஆண்டிலேதான் நம்முடைய முரளி அவர்கள் இளைஞர் அணியில் பொறுப் பேற்றுக் கொண்டு தன்னுடைய கடமையை நிறை வேற்றத் தொடங் கினார். பொறுப்பேற்ற காலத்திலிருந்து தொடர்ந்து, இந்த இயக்கத்திற்காகப் பாடுபட்டு, உழைத்து, கண்துஞ்சாது, பசி மறந்து பல்வேறு தியாகங்களுக்கு எல்லாம் தன்னை ஒப்படைத்துக் கொண்டு அவர் இந்த வட்டாரத்தில், இந்தப் பகுதியில் பணியாற்றி, படிப்படியாகத்தான்; ஏதோ திடீரென்று நேரடியாகப் பொதுச் செயலாளராக வந்து விடவில்லை; பகுதிக் கழகத்தின் பிரதிநிதியாக - மாவட்டக் கழகத்தின் பிரதிநிதியாக - மாவட்ட இளைஞர் அணியின் துணை அமைப்பாளராக; இப்படி படிப்படியாக உயர்ந்து, கழகத்திற்குப் பணியாற்றி ஒரு உரிய அங்கீகாரத்தை அவர் பெற்று, இன்றைக்குப் பகுதிக் கழகத்தின் செயலாளர்களில், அதுவும் சாதாரணமான பகுதிக் கழகச் செயலாளர் அல்ல, சிறப்பான பகுதிக் கழகச் செயலாளர்களில் ஒருவராக, அதுவும் ஓராண்டு ஈராண்டு அல்ல, 16 ஆண்டு காலம் தொடர்ந்து அந்தப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றிக் கொண்டிருப்பவராக, இன்றைக்கு அவர் தன்னுடைய கடமையை நிறை வேற்றிக் கொண்டிருக் கிறார்.

எனவே, அந்த உழைப்புக்கும், அவருடைய விசுவாசத் திற்கும்தான் நான் மட்டுமல்ல - இங்கு வந்திருக்கும் அனைவரும் இன்றைக்கு மகிழ்ச்சியோடு வந்திருக் கிறீர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சார்ந்தவர்கள், உழைப்புக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய ஐ.சி.எப். முரளி என்பதை யாரும் மறுத்திட முடியாது.

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு 75 ஆண்டு காலம். அந்த 75 ஆண்டுகால வரலாற்றைப் பெற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில், இன்றைக்கு இணைத்துக் கொண்டு பல்வேறு பொறுப் புகளை ஏற்று பணியாற்றக் கூடியவர்கள் ஏராளமாக வந்து கொண்டு இருக்கலாம்; அதே போல்தான் நம்முடைய முரளி அவர்கள் இந்த இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்டுக் கொண்டிருப்பவர்.

நான் இந்தக் கொளத்தூர் தொகுதியில் சட்டமன்றத் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்பட்டபோது, எனக்குத் துணை நின்று, என்னுடைய வெற்றிக்கு உழைத்தவர்களில் மிக முக்கியமானவர்களில் ஒருவராக நம்முடைய முரளி அவர்கள் இருக்கிறார்கள். "எப்படி இருக்கிறது தொகுதி?" என்று அவரிடத்தில் நான் கேட்பேன்... "எதற்கும் கவலைப்பட வேண்டாம். நீங்கள் வரவே வேண்டிய தில்லை. வீட்டிலேயே இருங்கள். நாங்கள் வெற்றி பெற்று உங்களிடத்தில் கொடுக்கிறோம்"; அவ்வாறு சொல்லிவிட்டு, இந்தத் தெருவிற்கு வரவில்லை, அந்த தெருவிற்கு வரவில்லை என்று அழைப்பார். அது வேறு! அது நான் ஏதோ வெற்றி பெறுவதற்காக மட்டுமல்ல, கழகத் தோழர்கள் அந்தத் தெருவில்கூட என்னைக் காண வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதற்காக நீங்கள் வாருங்கள் என்றுதான் அழைப்பார். அப்படி எல்லாம் பணியாற்று பவராக விளங்கிக் கொண்டிருப்பவர் நம்முடைய முரளி அவர்கள்.

அது மட்டுமல்ல, எங்காவது இடைத்தேர்தல் வந்துவிட்டால் அந்த இடைத்தேர்தலில் பணியாற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து, ஒவ்வொரு பகுதியிலிருந்து நம்முடைய கழகத் தோழர்களை நாம் அனுப்பி வைப்ப துண்டு. அவ்வாறு அனுப்பி வைக்கும் நேரத்தில் யார் பணியாற்றுவார்கள்? யார் செயலாற்று வார்கள்? என்பதை தெரிந்து, அவர்களைக் கண்டுபிடித்து அனுப்பு வோம். அவ்வாறு தேடிக் கண்டுபிடித்து அனுப்பக் கூடிய வர்களில் மிக முக்கியமான ஒருவர் நம்முடைய ஐ.சி.எப். முரளி அவர்கள்.

நான் முரளி அவர்களைச் சொல்வதைப் பார்த்து, நாகராஜன் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நாகராஜனும் இங்கு அமர்ந்திருக் கிறார். அவரும் சளைத்தவர் அல்ல. இரண்டு பேரும் போட்டி போட்டுக் கொண்டு இந்தத் தொகுதியில் பணியாற்றுகிற காரணத்தினால்தான் நான் இந்த தொகுதியில் நல்ல பெயரை வாங்கிக் கொண்டிருக்கிறேன். கொளத்தூரில் ஒரு செல்லப் பிள்ளையாக - அனைவரும் விரும்பும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக, எனக்கு இந்தப் பெயர் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது தனிப்பட்ட ஸ்டாலினால் அல்ல; முரளி போன்றவர்கள், நாகராஜன் போன்றவர்களின் உழைப்பினால்தான் இது கிடைத்திருக்கிறது. அதை நான் என்றைக்கும் மறந்துவிட மாட்டேன். னுனவே, அந்த நன்றி உணர்வோடுதான், இந்தத் திருமணத்தை பொருத்தவரையில், இதை நம்முடைய வீட்டுத் திருமணமாகக் கருதி இந்த மணவிழா நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துவதற்காக வந்திருக்கிறேன். ஞங்களோடு சேர்ந்து நானும் மணமக்களை வாழ்த்துகிறேன்.

# இந்தியாவில் 50 வயதுக்கு மேற்பட்ட பெரும்பாலான மக்கள், ஆபத்தில் இருந்தபோதிலும் 1 , ஷிங்கிள்ஸ் நோயைப் பற்றி அறிந்திருக்கவில்லை.

சென்னை, 25 பிப்ரவரி 2025: ஒரு புதிய உலகளாவிய கணக்கெடுப்பு, 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட இந்திய பங்கேற்பாளர்களில் 56.6% பேருக்கு ஷிங்கிள்ஸ் பற்றி அதிகம் தெரியாது அல்லது எதுவும் தெரியாது என்பதைக் காட்டுகிறது, இருப்பினும் 50 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களில் 90% க்கும் அதிகமானோர் தங்கள் உடலில் இந்த வைரஸைக் கொண்டுள்ளனர் மற்றும் அவர்கள் பாதிக்கப்படக் கூடியவர்கள். 1, 3 , 4 உலகளவில், பதிலளித் தவர்களில் 44% பேருக்கு மட்டுமே ஷிங்கிள்ஸ் பற்றி ஓரளவு பரிச்சயம் இருந்தது. 1 ஷிங்கிள்ஸ் விழிப் புணர்வு வாரத்தின் தொடக்கத்தில் (பிப்ரவரி 24 - மார்ச் 2, 2025) தொடங்கப் பட்ட இந்த கணக் கெடுப்பு, குறிப்பாக முன்பே இருக்கும் உடல்நலப் பிரச்சினைகள் உள்ள நபர்களிடையே, வயது தொடர்பான உடல்நல அபாயங்கள் குறித்த வரையறுக் கப்பட்ட விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவில், கணக் கெடுப்பில் பங்கேற்ற வர்களில் 61% பேர் நீரிழிவு நோய், சிஓபிடி, ஆஸ்துமா, இருதய நோய் அல்லது நாள்பட்ட சிறுநீரக நோய் போன்ற நாள் பட்ட நிலைமை களுடன் வாழ்வதாக தெரிவித்தனர். இருப்பினும், 49.8% மட்டுமே ஷிங்கிள்ஸ் உருவாவது குறித்து குறிப் பிடத்தக்க கவலையை வெளிப் படுத்துகிறார்கள். உலக அளவில், பங்கேற் பாளர்களில் 54% பேர் நாள்பட்ட நிலைமைகளைக் கொண் டிருந்தனர், ஆனால் 13% பேர் மட்டுமே ஷிங்கிள்ஸ் குறித்து குறிப்பிடத்தக்க கவலையை வெளிப் படுத்தினர். நிஷிரி இந்தியாவின் மருத்துவ இயக்குநர் டாக்டர் ஷாலினி மனன் அவர்கள், "நாம் வயதாகும்போது, நோயை எதிர்த்துப் போராடும் நமது இயற்கையான திறன் குறைந்து, ஷிங்கிள்ஸ் போன்ற பல்வேறு நோய்களுக்கு நாம் எளிதில் ஆளாக நேரிடுகிறது.5 வயதானது நாள்பட்ட நிலைமை களுடன் இணைந்தால், இந்த ஆபத்து அதிகரிக்கிறது. 6 இருப்பினும், 50 வயதுக்கு மேற்பட்ட வர்களில் கணிசமான பகுதியினர் இந்த அபாயங்கள் குறித்து அறிந்திருக்கவில்லை என்பதை கணக் கெடுப்பு வெளிப் படுத்துகிறது, இது கவலை அளிக்கிறது. வயதானவர்கள் தங்கள் ஆரோக்கியத்தில் முதுமையின் தாக்கத்தைப் புரிந்து கொள்வது, இந்த அபாயங்களை அங்கீகரிப்பது மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். இதில் ஆரோக்கியமான உணவைப் பரா மரித்தல், வழக்கமான உடற்பயிற்சியில் ஈடுபடுதல், அறிகுறி களை முன்கூட்டியே கண்டறிதல், சரியான நேரத்தில் சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொள்வது மற்றும் அவர்களின் சுகாதார வழங்குநர்களுடன் தடுப்பூசி விருப்பங் களைப் பற்றி விவாதித்தல் ஆகியவை அடங்கும்.. 7 , 8 , 9 , 10 ஆரம்பகால விழிப்புணர்வை வளர்ப்பதன் மூலமும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும், நமது வயதான மக்களின் நீண்டகால சுகாதார விளைவுகளை கணிசமாக மேம்படுத்த முடியும்" என்று கூறினார். 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட இந்தியர்களிடையே சுகாதார விழிப்புணர்வு மற்றும் நடத்தையில் குறிப்பிடத்தக்க வேறுபாட்டை இந்த கணக்கெடுப்பு வெளிப்படுத்தியது. 1 இந்த வயதினரில் பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (55.7%) தங்கள் உண்மையான வயதை விட இளையவர்களாக உணர்கிறார்கள், 24% பேர் ஒரு தசாப்தம் இளையவர்களாக உணர்கிறார்கள், 25% பேர் மட்டுமே வயதானதன் தாக்கத்தை உணர்ந்து அதைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். உணரப்பட்ட ஆரோக்கியத்திற்கும் உண்மையான சுகாதார மேலாண்மைக்கும் இடையிலான இந்த இடைவெளி ஒரு கவலைக்குரிய போக்கை எடுத்துக்காட்டுகிறது, ஏனெனில் முன்கூட்டியே கவனிப்பு இல்லாதது ஷிங்கிள்ஸ் போன்ற தொற்று நோய்கள் உட்பட வயது தொடர்பான நிலைமைகளுக்கு பாதிப்பை அதிகரிக்கக்கூடும். ஆரோக்கியமான வயதான நடைமுறைகளை ஊக்குவிக்க அதிக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைக்கான அவசரத் தேவையை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. 11 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் தங்கள் உடல்நலம் மற்றும் நல்வாழ்வை தீவிரமாக கண்காணிப்பதன் முக்கியத்துவத்தை சர்வதேச முதுமை கூட்டமைப்பு (ஐஎஃப்ஏ) வலியுறுத்தியுள்ளது, குறிப்பாக அவர்களின் நோயெதிர்ப்பு அமைப்புகள் இயற்கையாகவே வயதுக்கு ஏற்ப பலவீனமடைவதால்.